**தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம் - 2022**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கிமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1979 இன் 45 ஆம் இலக்க தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவன அதிகாரச் சட்டம், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.
இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிறுவனத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் வகையில் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கெண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது். எது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பென்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிறுவனத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும நிறுவனம் தொடர்ந்நியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.
நிறுவனத்தின நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, நிருவாக தொடர்புபட்ட தரப்பினர்களினால் வகிக்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காள்வாளரின் பொறுப்பு)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக தாக்கம் ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.
என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையையும் மதிப்பீடு செய்தல்.
- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்னிக்கு உள்ள ஆற்றல் தொர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல், பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும்

நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவிலும் மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,
- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிறுவனத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிறுவனம் செயற்பட்டுள்ளதாக,
- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,
- வளங்கள் சிக்கனமாகவும், வினைதிறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| உரிய நியமங்களுக்கான தொடர்புகளுடன் இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 2 இன் பிரகாரம் 9 ஆம் பந்திக்கு முரணாக நிறுவனத்தின் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 908,489 தொகையான சேமிப்புக் கணக்கின் மீதி காசுப் பாய்ச்சல் கூற்றில் மற்றும் நிதி நிலைமைக் கூற்றில் காசும் காசுக்குச் சமனானவைகளின் கீழ் கணக்கீடு செய்யப்படாது ஏனைய நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | தொழில்சார் அங்கத்துவ கட்டணத்தை அறவீடு செய்வதற்காக பேணப்பட்டு வந்த சேமிபப்புக் கணக்கின் ரூபா 908,488.96 மீதியினை ஏனைய நடைமுறைச் சொத்துக்களிலிருந்து நீக்கி காசும் காசுக்குச் சமமானவைகளின் கீழ் மாற்றி சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சேமிப்புக் கணக்கின் மீதியினை நிதி நிலைமைக் கூற்றில் காசும் காசுக்குச் சமனானவைகளின் கீழ் கணக்கீடு செய்தல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு கொள்கை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| நிறுவனத்தின் கணக்கீட்டு கொள்கைகளானது கற்கை நெறிகளிலிருந்து பெற்ற வருமானத்தை இனங்காணல், உரிய ஆண்டிற்குள் முடிவுறுத்திய மொடியூல்களின் எண்ணிக்கை அல்லது பயிற்சி கற்கை நெறிகளின் வினைத்திறனான | நிறுவனத்தின் கணக்கீட்டு கொள்கைக்கு இணங்க கற்கைநெறிகளின் வருமானத்தினை இனங்காணும் நடைமுறையாக கால | கற்கை நெறிகளிலிருந்து கிடைக்கும் வருமானத்தை இனங்காண்பதற்கான கணக்கீட்டுக் கொள்கை திருத்தம் செய்யப்படுதல் வேண்டும். |

மாதங்களின் எண்ணிக்கையின் பிரகாரம் மேற்கொள்ளப்படுகின்றது என தெரிவிக்கப்பட்டிருந்தும் மொடியூல்களின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு வருமானத்தை இனங்காணல் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் வினைத்திறனான மாதங்களின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொள்ளும் போது கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்பட்ட நிரந்தரமான திகதி, கற்கைநெறிக் காலத்தை நீடித்தல், குறைவாக சித்தியடைதல் மாணவர்கள் கற்கை நெறியை கைவிட்டுச் செல்லுதல், கற்கை நெறிகளை மாற்றுதல் போன்ற சந்தர்ப்பங்களின் போது வருமானத்தை இனங்காணும் முறைமையானது கணக்கீட்டுக் கொள்கையினுள் உறுதியாக காட்டப்பட்டிருக்காததனால் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட ரூபா 22,512,139 தொகையான கல்வி மற்றும் தொழில்சார் கற்கைநெறி வருமானம் ரூபா 9,894,479 தொகையான பெறவேண்டிய பயிற்சி கற்கை நெறி வருமானம் மற்றும் ரூபா 3,793,667 தொகையான முன்னரே பெற்றுக்கொள்ளப்பட்ட கற்கைநெறிக் கட்டணம் முதலியவற்றின் சரியான தன்மை தொடர்பாக கணக்காய்வின் போது திருப்தி கொள்ள முடியாதிருந்தது.

அடிப்படை மாத்திரம் தொடர்ந்து கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுவதுடன் மொடியூல்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் வருமானத்தினை இனங்காணும் அடிப்படையினை கணக்குகளிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என தெரிவிக்கிறேன். இதற்கிணங்க கற்கை நெறி ஆரம்பிக்கப்பட்ட மாதத்தின் பிரகாரம் கற்கைநெறியின் கால எல்லையினை கவனத்திற்கு எடுத்து வருமானத்தை இனங்காணுதல், கணக்கீட்டு கொள்கைக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் காலத்தை நீடித்தல் ,கற்கை நெறிகளை கைவிட்டுச் செல்லுதலினால் ஏற்படும் தாக்கம், குறைவாக சிதிதியடையும் மாணவர்களின் கற்கைநெறி கட்டணம் தொடர்பாகவும் மற்றும் கற்கை நெறிகளை மாற்றுகின்ற மாணவர்களின் வருமானம் இனங்காணப்பட்ட முறைமை தொடர்பாகவும் மற்றும் கற்கைநெறிகளை மாற்றுகின்ற மாணவர்களின் வருமானம் இனங்காணப்பட்ட முறைமை தொடர்பாகவும் 2023 ஆம் ஆண்டிற்கான கணக்கு கூற்றுக்களைத்

| | | | |
|---|---|---|---|
| | | தயாரிக்கும் போது சரியாகக் குறிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |

### 1.5.3 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2019 ஆம் ஆண்டில் ரூபா 851,800 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்ட 10 சுங்க நாணயங்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2,309,175 தொகைக்கு மதிப்பீடு செய்யப்பட்டு அப்பெறுமதியானது ஏனைய நடைமுறைச் சொத்துக்களின் ''தங்கம் வைப்புக் கணக்கிற்கு'' வரவு வைக்கப்பட்டு நிறுத்திவைக்கப்பட்ட உழைப்புக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. சந்தைப் பெறுமதியின் அடிப்படையில் உருவாகிய இந்த மிகைப் பெறுமதியான ரூபா 1,457,375 தொகையானது ஒதுக்க கணக்கிற்குச் செலவு வைப்பதற்குப் பதிலாக நிறுத்திவைக்கப்பட்ட உழைப்புக் கணக்கிற்கு செலவு வைத்ததன் காரணமாக நிறுத்திவைத்த உழைப்பின் பெறுமதி ரூபா 1,457,375 ஆல் மிகைக் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | 2019 ஆம் ஆண்டின் போது இந்த தங்க நாணயம் ஊழியர்களுக்குப் பகிர்ந்தளிப்பதற்காக இடம்பெற்ற ஒரு செலவு என்பதனால் அந்த ஆண்டின் போது ஒரு செலவாக பதிவழிக்கப்பட்டிருந்தது. இந்த தங்க நாணயத்தை ஊழியர்களுக்கு பகிர்ந்தளித்தல் முகாமைத்துவத்தின் மூலம் கைவிடப்பட்டதனால் அந்த தங்க நாணயத்தின் பெறுமதி 2022-12-31 ஆந் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட சந்தைப் பெறுமதிக்கு இணங்க ஒரு நடைமுறைச் சொத்தாக கணக்கீடு செய்யப்பட்டது. | தங்க நாணய மதிப்பீட்டுடின் போது உருவாகிய இலாபம் ஒதுக்கமாக கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (ஆ) | நிறுவனத்தினால் கற்கைநெறிகளைத் தொடருகின்ற மாணவர்களுக்கு 10 சதவீத சேவைக் கட்டணத்துடன் விடுதி, உணவு மற்றும் தங்குமிட வசதிகளை வழங்கி மீளாய்வாண்டின் போது ரூபா 25,016,678 வருமானம் உழைக்கப்பட்டிருந்தும் அதில் உள்ளடக்கப்பட்ட சேவைக் கட்டண வருமானத்தை கழித்ததன் பின்னர் தேறிய வருமானம் ரூபா 22,556,427 மாத்திரம் நிதி செயலாற்றல் கூற்றில் ஆண்டிற்கான | வெளித்தரப்பினர்களுக்கு வசதிகளை வாடகைக்கு வழங்குவதன் மூலம் நிறுவனம் 2022 ஆம் ஆண்டின் போது வருமானத்தை ரூபா 22,556,426 ஆக நிதி செயலாற்றல் கூற்றில் குறிப்பிட்டிருந்தது. கணக்கீடு செய்யப்பட்ட மொத்தமாக வெளித்தரப்பினர்களுக்கு வசதிகளை வழங்குவதன் மூலம் பெற்ற வருமானத்தில் 10 சதவீத | வருமானங்களை கணக்கீடு செய்யும் போது சேவைக் கட்டண வருமானத்தை உள்ளடக்கி மொத்த வருமானம் கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சேவைக் கட்டணத்தை கழித்து வருமானக் கூற்றில் காட்டப்பட்டுள்ளது. | |
| (இ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தின் 122 முழுநேர அங்கத்தவர்களிடமிருந்து ரூபா 1,521,000 தொகையும் பத்து உதவி அங்கத்தவர்களிடமிருந்து ரூபா 88,100 தொகையுமாக மொத்த அங்கத்துவ கட்டணம் ரூபா 1,609,100 தொகை கிடைக்க வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றில் அப்பெறுமதி கிடைக்க வேண்டிய மீதியாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2022-12-31 ஆந் திகதியில் உள்ளவாறு மொத்த அங்கத்தவர்கள் 216 நபர்கள் இருந்த போதிலும் அங்கத்தவர்கள் நிண்டகாலமாக கட்டணத்தை செலுத்தாது செயற்பாடற்றிருத்தல் மற்றும் உயிர் வாழ்கின்றார்களா இல்லையா என்பதனை உறுதிப்படுத்தும் சிக்கலின் அடிப்படையில் கிடைக்க வேண்டிய அங்கத்துவ கட்டணம் தொடர்பாக கணக்கீடு செய்தல் சிக்கலாகக் காணப்பட்டதன் காரணமாக பணத்தை வழங்கும் போது கிடைப்பதனை அடிப்படையாகக் கொண்டு அங்கத்துவ கட்டணம் கணக்கீடு செய்யப்பட்டது. | வருடாந்த தொழில்சார் அங்கத்துவ கட்டணமானது அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (ஈ) | நிதி செயலாற்றல் கூற்றின் பிரகாரம் அங்கத்துவ கட்டண வருமானம் ரூபா 173,330 ஆக இருந்த போதிலும் 2022 ஆம் ஆண்டிற்கான அங்கத்துவ கட்டண வருமானம் ரூபா 569,000 ஆக இருந்ததனால் நிதி செயலாற்றல் கூற்றில் அங்கத்துவ கட்டண வருமானம் ரூபா 395,670 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டில் வருடாந்த நிதிக் கூற்றினைத் தயாரிக்கும் போது தற்பொழுது செயற்படும் நிலையை கடந்துள்ள 105 அங்கத்தவர்களின் தகவல்களின் பிரகாரம் அங்கத்துவ பணத்தை பெறுவதனை கணக்கீடு செய்து சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகளை சரிசெய்வதற்கு முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களில் வருடாந்த அங்கத்துவ கட்டண வருமானத்தை சரியாகக் காட்டுதல் வேண்டும். |
| (உ) | காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் மதுகம, அகலவத்த, டேடன் பீல்ட் தோட்டத்தில் அமைந்துள்ள 10 ஏக்கர் காணி ரூபா 75,405 பெயரளவுப் பெறுமதிக்கு 1999 | இக்காணியில் 2 1/2 ஏக்கர்கள் அளவானவை தேசிய மொழிகள் நிறுவனத்திற்கு அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் | மதுகம, அகலவத்த, டேடன் பீல்ட் தோட்டத்தின் நியாயப் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட |

| | | | |
|---|---|---|---|
| | செப்தெம்பர் 24 ஆந் திகதி நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் தற்பொழுது 7 1/2 ஏக்கர்கள் நிறுவனத்திடம் காணப்பட்டிருந்தும் அதன் பெயரளவுப் பெறுமதி அல்லது நியாயப் பெறுமதியை கணிப்பிட்டு மீளாய்வாண்டு வரை நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. இக்காணி எந்த செயற்பாட்டிற்கும் ஈடுபடுத்தப்படாது குறைவாகப் பயன்படுத்தப்பட்டுக் காணப்பட்டதுடன் அதன் 2023 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 15,080,000 ஆகும். | உறுதியின் மூலம் ஒப்படைக்கப்பட்டது. இக்காணியில் 7 1/2 ஏக்கர்கள் அளவான மிகுதிப் பகுதி மதிப்பீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் 2021 ஆம் ஆண்டின் போது மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அது தொடர்பாக வேண்டுகோள் விடுக்கப்பட்டது. | வேண்டியதுடன் இக்காணியை வினைத்திறனாக நடவடிக்கைகளுக்கு ஈடுபடுத்ததுதல் வேண்டும். |
| (ஊ) | 2022 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட விடுதி நீர்க்குழாய் முறைமை மற்றும் கழிவுநீர் முறைமையை புனரமைப்புச் செய்யும் ஒப்பந்தத்தின் நடைமுறை வேலைப் பெறுமதியில் தனித்தனியாகக் காட்டப்பட வேண்டிய தேயிலை தயாரிப்பினை வகைப்படுத:தும் இயந்திரத்தின் பெறுகைக்குரிய (ரொடேடர் செயின்) ரூபா 319,975 தொகையான நடைமுறை வேலையும் உள்ளடக்கப்பட்டுள்ளது. | 2022-12-31 ஆந் திகதியில் உள்ளவாறு இந்த நீர்க்குழாய் முறைமையை புனரமைப்புச் செய்வதற்கான நடைமுறை வேலையாக ரூபா 10,667,529 பெறுமதி உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 319,575 தொகை கற்றல் நிலையத்தின் ரொடர் செயின் இயந்திரத்திற்காகச் செலுத்தப்பட்ட பணமும் உள்ளடக்கப்பட்டிருந்தது. | நிதிநிலைமைக் கூற்றில் நடைமுறை வேலையினை சரியாக வகைப்படுத்திக் காட்டுதல் வேண்டும். |
| (எ) | நிறுவனத்தின் கீதத்திற்காக ஒரு வீடியோவினைத் தயாரித்தல் என்ற செயற்பாட்டிற்காக வெளித்தரப்பினர்களுக்கு முறையே ரூபா 755,000 மற்றும் ரூபா 295,000 ஆக மொத்தமாக ரூபா 1,050,000 தொகை 2022 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்டிருந்ததுடன் நிதிக் கூற்றுக்களில் இந்த பெறுமதி கட்புலனாகாத சொத்தாக அடையாளம் காண்பதற்குப் பதிலாக பயிற்சி செலவாக கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | நிறுவனத்தின் கீதத்துடன் நிறுவனத்தின் கடமைகள் தொடர்பாக மேம்படுத்தல், வீடியோவினை உருவாக்குவதற்காக முறையே ரூபா 755,000 மற்றும் ரூபா 295,000 பணம் கட்புலனாகாத ஒரு சொத்தாக இனங்காணப்பட்டு அதனை நிதிக்கூற்றுக்களில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கட்புலனாகாச் சொத்துக்களை நிதிக்கூற்றுக்களில் தனியாகக் காட்டுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிதிக்கூற்றுக்களில் கட்புலனாகாச் சொத்துக்களின் பெறுமதி அத்தொகையால் குறைத்தும் பயிற்சி செலவுகளின் பெறுமதி அத்தொகையால் அதிகரித்தும் காட்டப்பட்டிருந்தது. | | |
| (ஏ) | நான்கு மாடி நிருவாகக் கட்டிடத்தினை நிர்மாணிக்கும் ஒப்பந்தத்திற்காக ஒரு தனியார் கம்பனிக்கு 2021 ஆம் ஆண்டின் போது மொத்தமாக ரூபா 41,324,784 (வெட் இன்றி) முற்பணம் வழங்கப்பட்டிருந்ததுடன் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இறுதி விலைப்பட்டியலில் ரூபா 30,798,742 மாத்திரம் அறவிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் இன்னும் அறவிட வேண்டிய ரூபா 10,526,042 தொகையான பெறவேண்டிய மீதி நிதிநிலைமைக் கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை. | நான்கு மாடி விரிவுரை மண்டபத்தினையும் ஆராய்ச்சிப் பிரிவினையும் உள்ளடக்கிய புதிய கட்டிட ஒப்பந்தத்தின் இரண்டாம் கட்டத்திற்காக செலுத்தப்பட்ட முற்பணம் ரூபா 44,630,178 தொகையில் ரூபா 3,305,979 பணம் வெட் பணமாக உள்ளதுடன் அதற்கிணங்க தேறிய செலுத்திய முற்பணம் ரூபா 41,324,728 ஆகும். 2022-12-16 ஆந் திகதிய Interim Payment Certificate No. 10 இன் மூலம் ரூபா 30,798,742 பணமானது செய்யப்பட்ட வேலைகளை உள்ளடக்கி முடிவுறுத்தப்பட்டது. அதற்கிணங்க இன்னும் உள்ளடக்கப்பட வேண்டி இருந்த பணம் ரூபா 10,526,007 ஆகும். | பெறவேண்டிய அனைத்து பணமும் நிதிக்கூற்றுக்களில் சரியாக காட்டப்படுதல் வேண்டும். |
| (ஐ) | நான்கு மாடி நிருவாகக் கட்டிடத்தினை நிர்மாணிக்கும் ஒப்பந்தத்தின் கட்டம் I மற்றும் கட்டம் II இன் கீழான ரூபா 9,214,606 தொகையான நிறுத்திவைத்தல் பணமானது நிதி நிலைமைக் கூற்றில் பொறுப்புக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | மேற்கூறிய கட்டம் I இன் நிறுத்திவைத்தல் மற்றும் கட்டம் II இற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட விலைப்பட்டியலின் நிலுவை ரூபா 9,610,284.67 ஆகிய இரண்டின் மொத்தமாகிய ரூபா 15,598,792.45 பெறுமதி செலுத்த வேண்டிய பொறுப்பாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | ஒப்பந்தங்களின் நிறுத்திவைத்தல் பணம் சரியாக கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

**1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெறவேண்டிய பணம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2019/2020 கல்வி ஆண்டிற்காக முடிவுறுத்தப்பட்ட ஆய்வுகள் மற்றும் தொழில்சார் கற்கை நெறிகளைத் தொடரும் மாணவர்களிடமிருந்து இந்த நிறுவனத்தினால் ரூபா 455,000 அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரை அப்பெறுமதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 சனவரி இறுதியளவில் மேற்கொள்ளப்பட்ட கற்கை நெறிகளுக்காக ரூபா 455,000 கற்கைநெறி கட்டணங்களின் அறவீடு நிலுவையாகக் காணப்பட்டது. | நிலுவையான கற்கை நெறிக் கட்டணங்களை அறவீடு செய்வதற்கு துரிதமாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலிவற்றுக்கான தொடர்புகள் | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள அரசாங்க தொழில்முயற்சிகள் தொடர்பான நிறுவன ரீதியான நல்லாட்சிகள் பற்றிய வழிகாட்டிக் கோவையின் 4.4. ஆம் பிரிவு | உள்ளகக் கணக்காய்வினால் நிறுவனத்தின் அனைத்து நிருவாகச் செயற்பாடுகளும் நிறுவனத்தின் தலைவருக்கு அறிக்கையிடப்பட வேண்டிய போதிலும் தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தின் வருடாந்த தாபன பதவிநிலைக்கு அமைய உள்ளக கணக்காய்வானது நிறுவனத்தின் பணிப்பாளரின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | உள்ளகக் கணக்காய்வுப் பதவியானது நிருவாக சபைக்கு பொறுப்புக்கூற வேண்டிய ஒரு பதவியாக பதவிநிலைக்கு இணங்க பதவியணியினர் சேர்மானத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. சரியான தாபனக் கட்டமைப்பினை ஆண்டறிக்கையில் உள்ளடக்கி இப்பிழை சரி செய்யப்படும். | உள்ளகக் கணக்காய்வாளர் நிருவாக சபைக்கு பொறுப்புக்கூற வேண்டிய ஒரு பதவியாக காட்டும் வகையில் தாபன கட்டமைப்பு திருத்தப்படுதல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 8,548,607 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய அண்டிற்கான மிகை ரூபா 19,202,306 ஆகும். அதற்கு இணங்க நிதி விளைவுகளில் ரூபா 10,653,699 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் வழங்கல்கள் மற்றும் பயன்பாட்டுச் சேவைகள் ரூபா 4,612,060

தொகையாலும் இயலளவு அபிவிருத்தியுடனான பயிற்சி செலவு ரூபா 5,920,260 தொகையாலும் வசதிகளை வாடகைக்கு வழங்கும் செலவு ரூபா 10,052,711 தொகையாலும் அதிகரித்தல் இந்த வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக இருந்தது.

## 2.2 விகிதாசார பகுப்பாய்வு

மீளாய்வாண்டின் நடைமுறைச் சொத்து விகிதம் மற்றும் விரைவுச் சொத:து விகிதம் முறையே 4:1 மற்றும் 3:1 ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டின் போது அந்த விகிதம் 7:1 ஆக இருந்தது. 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் குறுங்கால வைப்புக்கள் மற்றும் முதலீடுகள் முறையே ரூபா 191,336,512 மற்றும் ரூபா மற்றும் ரூபா 70,781,329 ஆக இருந்தமை நடைமுறை விகிதம் உயர்ந்த பெறுமதியைக் கொண்டிருப்பதற்கு பிரதான காரமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | நிறுவனத்தினால் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்காக மாதாந்தம் ஒரு வீட்டிற்கு ரூபா 80,000 வீதம் இரண்டு வீடுகள் 2021 பெப்ரவரி 01 ஆந் திகதியிலிருந்து வாடகைக்குப் பெற்றுக்கொள்ளப்பட்டு மீளாய்வாண்டிற்காக ரூபா 1,920,000 குத்தகை செலுத்தப்பட்டிருந்தது. குத்தகைக்கு வழங்கியவரின் இணக்கப்பாட்டினைப் பெற்றுக்கொள்ளாது 2022 யூன் 30 மற்றும் 2022 திசெம்பர் 31 ஆகிய இரண்டு திகதிகள் வரை நிறுவனத்தின் பணிப்பாளரால் முறையற்ற வகையில் இரண்டு 06 மாத காலப்பகுதிகளுக்காக குத்தகை காலத்தை நீடித்தல் ஒரு தலைப்பட்ச கடிதத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | வெளிவாரி பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தும் குறிக்கோளில் நிறுவனத்திற்கு அருகாமையிலுள்ள ஒரு தடவையில் 70 நபர்களுக்கு தங்குமிட வசதிகளை வழங்கக்கூடிய இந்த 2 வீடுகள் நிறுவனத்தின் நிருவாக சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் வாடகைக்குப் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. | முழுமையான வாடகை காலத்திற்கு உடன்படிக்கை செய்யப்பட வேண்டியதுடன் உடன்படிக்கையின் பிரகாரம் கொடுப்பனவு செய்யப்படுதல் வேண்டும். |
| (ஆ) | தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவில் கணக்காய்வு நடவடிக்கைகளை தொடர்ச்சியாக மேற்கொள்வதற்காக போதியளவு உள்ளகக் கணக்காய்வுப் பதவியணியினர் அப்பிரிவிற்கு இணைத்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிறுவனத்தில் தற்பொழுமு தீவிர ஊழியர் பற்றாக்குறை காணப்படுவதுடன் ஆட்சேர்ப்பு நிறுத்தப்பட்டுள்ளதன் காரணமாக அதற்கு தேவையான பதவியணியினர்களைச் சேர்த்துக்கொள்ளுதல் சிக்கலாக உள்ளது. அரசாங்கத்தின் அபிவிருத்தி | உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினை வலுப்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | உத்தியோகத்தர்களில் சிலர் நிறுவனத்திற்கு இணைத்துக் கொள்ளப்பட்டிருந்த போதிலும் அந்த எண்ணிக்கையானது நிறுவனத்தின் செயற்பாடுகளை முறையாக நிறைவேற்றுவதற்கு போதியதாக இல்லை. பதவியணியினர்களைச் சேர்த்து உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினை வலுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (இ) | நிறுவனத்தின் பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் அடிப்படையில் பதவியணி அங்கத்தவர்கள் ஓய்வு பெறுகையில் வழங்குவதற்காக 22 கரட் தங்கப் பவுணிலான 13.5 கிராம்கள் கொண்ட 10 தங்க நாணயங்கள் 2019 மே 30 ஆந் திகதி ஒரு தனியார் நிறுவனத்திடமிருந்து ரூபா 851, 800 தொகைக்கு கொள்வனவு செய்து செலவாக பதிவழிக்கப்பட்டிருந்தது. நிறுவனரீதியான மற்றும் நிதி ரீதியான காரணங்களின் அடிப்படையில் இந்த தங்க நாணயங்கள் பகிர்ந்தளிக்கப்படாது 3 ஆண்டுகள் காலமாக நிறுவனத்தின் பாதுகாப்பு பெட்டியில் வைக்கப்பட்டிருந்ததுடன் பௌதீக பரீட்சிப்பின் போது 10 தங்க நாணயங்கள் இருந்த டீபோதிலும் அந்த தங்க நாணயங்கள் 22 கரட் பவுண் என்பதனை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 338/16 ஆம் இலக்க நிருவாக சபை பத்திரத்திற்கு பெற்றுக்கொள்ளப்பட்ட அங்கீகாரத்தின் பிரகாரம் 20 ஆண்டுகளுக்கு மேற்பட்ட சேவைக் காலத்துடனான ஊழியர்களுக்கு 22 கரட் ஒரு தங்க பவுண் வீதம் 6 நபர்களுக்கும் 1 1/2 பவுண் தங்கம் வீதம் 25 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ஊழியர்களுக்காகவும் 30 ஆண்டுகள் சேவைக்காலத்தை மிகைத்த 3 நபர்களுக்கு 2 தங்கப் பவுண்கள் வீதம் மொத்தமாக 13.5 தங்க பவுண்கள் ரூபா 851,800 தொகைக்கு 22 கரட் தங்கம் சுவர்ணமஹால் நிறுவனத்தில் கொள்வனவு செய்யப்பட்டது. | நிறுவனத்தின் குறிக்கோள்களுக்குரிய செலவுகளை மாத்திரம் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் இந்த நாணயம் தங்க நாணயம் என்பதனை உறுதிப்படுத்துவதற்கும் மதிப்பீட்டிற்குமான அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். |

**3.2 பெறுகை முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தின் நீர்க்குழாய் மற்றும் கழிவுநீர் | ஒப்பந்தத்தை நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் | ஒப்பந்தத்தை தாமதமின்றி பூர்த்தி செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முறைமையை புனரமைப்புச் செய்வதற்காக ஒரு தனியார் கம்பனிக்கு ரூபா 8,937,618 தொகைக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்ததுடன் அது 2021 செப்தெம்பர் 21 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2021 திசெம்பர் 19 ஆந் திகதி முடிவுறுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. 2022 செப்தெம்பர் 08 ஆந் திகதி வரை 04 சந்தர்ப்பங்களின் போது செயற்திட்ட ஆலோசகரின் சிபாரிசின் அடிப்படையில் செயற்திட்ட ஆலோசகரின் சிபாரிசின் அடிப்படையில் செயற்திட்ட காலத்தை நீடித்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் இறுதி வரை அச்செயற்பாடு பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே இந்த ஒப்பந்தத்திற்காக வழங்குனர் வழங்கியிருந்த ரூபா 446,880 செயலாற்றல் பிணைமுறியும் 2022 யூலை 26 ஆந் திகதி முடிவடைந்திருந்ததுடன் நிறுவனத்தினால் செயலாற்றல் பிணை முறியின் திகதியை நீடிப்புச் செய்வதற்கு அல்லது ஒப்பந்தத்தை பூரணப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பூர்த்திசெய்வதற்கு ஒப்பந்தக்காரர் தவறியிருந்ததுடன் அதற்காக நாட்டில் காணப்பட்ட Covid -19 தொற்றுநோய் நிலைமை, எரிபொருள் பற்றாக்குறை, நிர்மாண மூலப்பொருள் பற்றாக்குறை, நாட்டில் காணப்பட்ட பொருளாதார ஸ்திரத்தன்மை இல்லாமை என்பன காரணமாக ஒப்பந்தக் கம்பனியால் எழுத்துமூலம் நிறுவனத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் ஒப்பந்த காலத்தை நீடிப்பதற்கு நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது. 2022 ஆம் ஆண்டின் இறுதியில் செயற்திட்டம் முடிவுறுத்தப்படாதிருந்தது டன் தற்பொழுது செயற்திட்டம் முடிவடைந்துள்ளது. | செயலாற்றல் பிணைமுறியை பணமாக்குவதற்கு அல்லது அதன் காலத்தை நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்காத பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்களுக் கு எதிராக விசாரணைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (ஆ) | அத்துருகிரியவில் அமைந்துள்ள நிறுவனத்தின் தலைமை அலுவலக விடுதியின் நீர்க் குழாய் முறைமை மற்றும் கழிவு நீர் முறைமையை 90 நாட்கள் காலத்திற்குள் புனரமைப்புச் செய்வதற்காக ஒப்பந்த விலை கோரப்பட்டு ரூபா 8,937,618 தொகைக்கு ஒரு தனிப்பட்ட ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் ரூபா 2,070,574 விலைமுரணுக்கு உட்பட்டு 2022 திசெம்பர் 31 ஆந் திகதி ஒப்பந்தக்காரருக்கு ரூபா 10,149,710 தொகை சான்றுபடுத்திய வேலைகளுக்காக செலுத்தப்பட்டிருந்தது. உடன்படிக்கையில் எந்த ஏற்பாடும் இல்லாது விலை முரண்களுக்காக ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்ட ரூபா 2,070,574 தொகை | ஒப்பந்தத்தை நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் பூர்த்திசெய்வதற்கு ஒப்பந்தக்காரர் தவறியிருந்ததுடன் அதற்காக நாட்டில் காணப்பட்ட Covid-19 தொற்றுநோய் நிலைமை, எரிபொருள் தட்டுப்பாடு, நிர்மாண மூலப் பொருள் தட்டுப்பாடு, நாட்டில் காணப்பட்ட பொருளாதார ஸ்திரத்தன்மை இல்லாமை காரணம் என ஒப்பந்தக் கம்பனியால் எழுத்துமூலம் நிறுவனத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டது. 2022-12-31 ஆந் திகதியளவில் | சட்டரீதியற்ற ரூபா 2,070,574 தொகையான விலை முரணை அங்கீகரித்த சிபாரிசு செய்த மற்றும் சான்றுபடுத்திய உத்தியோகத்தர்களிடமி ருந்து அறவீடு செய்தல் வேண்டும். |

| | |
|---|---|
| சட்டரீதியற்ற கொடுப்பனவாக அவதானிக்கப்பட்டது. | இந்த ஒப்பந்தத்திற்காக வெட் உடன் ரூபா 10,149,710 பணம் மாத்திரம் நிறுவனத்தினால் ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்டது. செயற்திட்ட ஆலோசகரின் சிபாரிசின் அடிப்படையில் இச்செயற்திட்டத்தின் விலை முரண்களுக்காக ரூபா 2,070,574.00 தொகைக்கான அங்கீகாரம் உரிய ஒப்பந்த கம்பனிக்கு வழங்கப்பட்டுள்ளது. |